முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 835

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.01.2022, செவ்வாய்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா போற்றி
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா போற்றி
வானவர்கள் போற்றும் வள்ளலே
வாழுகின்ற ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் மார்கழி மாதம் 27ம் நாள், 11.01.2022 செவ்வாய்கிழமை)
உயர்வாக அரங்கன் சக்தி உலகமறிய உரைப்பேன்
ஞானவான்களெல்லாம் அரங்கன் வழிக்குவந்து
ஞானிகள் பூஜைகள் செய்துகொண்டு வருவதோடு
3. வருவதோடு தானதர்ம சக்தியை
வையகம் எங்கும் பரப்பவே
ஞானதேசிகன் வந்த நோக்கம் பூர்த்தியாகி
ஞானயுகமாற்றமாக உலகம் அடையக்கூடும்
4. கூடவே அரங்கனை தொடர்ந்து
குறையில்லாது தொண்டர்படை பெருகி
நாடெங்கிலும் ஞானிகள் உருவாகி இனிதே
ஞான ஆட்சிக்காலமும் சடுதி உதயமாகும்
5. ஆகவே அரங்கனுக்குள் ஆறுமுகன் யான்
அற்புதத்தை நடத்தி வர
யுகமக்களே ஓங்காரக்குடில் நோக்கி
உங்கள் தொடர்பை கூட்டுங்கள்
6. கூட்டி வருக வருக குறையின்றி இந்த உலகம்
நாட்டமெல்லாம் ஞான வழிக்கு வந்து
நன்மைசெய்யும் ஆளுமைகளும் இனிதே உருவாகி
நாடெங்கிலும் ஞான ஆட்சி மலரக்கூடும்
7. கூடவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
குருவாக வழிநடத்தும் மிக உயர்ந்த ஞானி
நாடியே ஆளுமை மக்களும் ஞானவான்கள்
நாட்டிடுவேன் அரங்கன் தொடர்பில் மிகுந்து வர
8. வருகவருக வையகம் வளர்ச்சி காணும்
வருகவருக வையகம் மிகுந்த பாதுகாப்பைப்பெறும்
தருகின்ற அரங்கன் உபதேசமே
தரணியை காக்கின்ற ஞானமாக மாறும்

9. மாறுதலை செய்து அரங்கன் வழி
மக்களை மீட்கவே ஆறுமுகன் யான்
அரங்கன் உள்ளிருந்து அற்புதம் நடத்துகின்றேன்
அப்பனே உலகப்பெரும் மக்களே

10. ஐயமற அரங்கன் சொல்செயல் அனைத்தையும்
வேதமாக ஏற்று நடந்து வர
வருகவே வையகம் உலக மாற்றம் என்கின்ற அற்புதத்தைக் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—